பக்கங்கள்:-22

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | வைகாசி 16 | செவ்வாய்க்கிழமை | 20.05.2025 | அதிர்வு 289

## இன்று கூடுகின்றது நாடாளுமன்றம்



நாடாளுமன்றம் இன்று 20ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை கூடவிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம்

07

AMNESTY INTERNATIONAL

### இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள்:

# அநுரகுமார அரசாங்கமேனும் நீதியையும் பொறுப்புக்கூறலையும் நிலைநாட்டுமா?

## சர்வதேச மன்னிப்புச் சபை கேள்வி

“இலங்கையின் கடந்தகால அரசாங்கங்கள் போர்க் குற்றங்கள் இடம்பெறவில்லை என மறுத்து வந்திருப்பதுடன், அவை தொடர்பில் நம்பத் தகுந்த விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் தவறியிருக்கின்றன. இந்நிலையில் தற்போதைய அரசாங்கமேனும் கடந்த கால அரசாங்கங்களின் தோல்விகளைச் சீர்செய்து, நீதியையும் பொறுப்புக்கூறலையும் நிலைநாட்டுமா?.”

- இவ்வாறு சர்வதேச மன்னிப்புச்சபை கேள்வி எழுப்பியுள்ளது.

06

# அமைதியை நிலைநாட்டலே மிக உயர்ந்த நீதி! இங்கு மீண்டும் யுத்தம் ஏற்பட இடமளியோம்!!

## 16 ஆவது இராணுவ வீரர்கள் நினைவு நிகழ்வில் ஜனாதிபதி உறுதி



“பெற்றோர்களே, நீங்கள் இந்த தாய் நாட்டின் போரை முடிவுக்குக் கொண்டு-வர உங்கள் பிள்ளைகளைத் தியாகம் செய்தீர்கள். நீங்கள் சிறந்த தந்தையர் – தாய்மார். மனைவிமாரே உங்கள் கணவரைத் தியாகம்

06




யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்குள் ஊடுருவி, எப்படியும் அங்கு நிலை கொண்டு விட வேண்டும் என்ற சீனத் தரப்பின் மும்முரம் – விடா முயற்சி – அதில் பொதிந்துள்ள சூக்குமம் – எல்லோருக்கும் தெரிந்த விடயங்கள்தான்.

தென்னிந்தியாவின் தென்கோடி முனைக்குக் கூப்பிடு தொலைவில், யாழ் தீபகற்பத்தில் உயர் கல்விக்கூடமாக விளங்குவது யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம். தென்னிந்தியாவோடு இயல்பாகவே தொப்புள் கொடி உறவு கொண்ட யாழ்ப்பாண மக்கள் மத்தியிலும், யாழ் பல்கலைக்கழக மாணவர்கள், புத்திஜீவிகள் உட்பட்ட பல்கலை சமூகத்தினர் மத்தியிலும் , இந்திய வல்லாதிக்கத்துக்கு எதிரான – பாரதத்தோடு முரண்பட்டு நிற்கின்ற – மற்றொரு வல்லரசான சீனா வடக்கில், குறிப்பாக யாழ் பல்கலைக்கழகத்தில், வந்து காலூன்றுவதற்கு எதிரான உணர்வு ஆழமாக நிலவுகின்றது என்பது உண்மை.

ஆயினும், அதை உடைத்துக் கொண்டு பல்கலைக்கழகத்துக்குள் ஏதோ ஒரு

06






# படையினர் தின நினைவு நிகழ்வு



யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த தினத்தை நினைவுகூரும் நிகழ்வும், 16 ஆவது படைவீரர்கள் தின நினைவு நிகழ்வும் நேற்று பிற்பகல் பத்தரமுல்லை படைவீரர்கள் நினைவிடத்திற்கு முன்பாக, முப்படைகளின் தளபதி, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் நடைபெற்றது.












# முப்பது வருட போர் காரணமாக வடக்கிலும் தெற்கிலும் ஏராளமானோர் ஊனமுற்றனர்!

## மிஹிந்து செத் மெதுரவில் தங்கி சிகிச்சை பெறும் படையினரின் நலன் குறித்து நேரில் ஆராய்ந்தபோது ஜனாதிபதி தெரிவிப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று காலை அத்திடியவில் உள்ள 'மிஹிந்து செத் மெதுர' சுகாதார விடுதிக்குச் சென்று அங்கு தங்கி சிகிச்சைபெற்றுவரும்படையினரின்நலன் குறித்து விசாரித்தார்.

படையினரைச் சந்தித்து அவர்களுடன் சுமுகமான உரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதி, படையினர் வரைந்த ஓவியங்கள் மற்றும் படைப்புகளைப் பார்வையிட்டார்.

முப்பது வருட யுத்தம் காரணமாக வடக்கு மற்றும் தெற்கில் ஏராளமானோர் உயிர்களையும் கைகால்கள் மற்றும் உடல் அங்கங்களை இழந்து நிரந்தரமாக ஊனமுற்றனர் என்று தெரிவித்த ஜனாதிபதி, இதுபோன்ற ஒரு நிலைமை மீண்டும் ஏற்பட ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

ஊனமுற்ற படையினர் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நல்வாழ்வுக்காக அர்ப்பணிப்புடன் தொடர்ந்தும் செயற்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மிஹிந்து செத் மெதுரா சுகாதார விடுதியில் பணிபுரியும் மருத்துவர்கள் தலைமையிலான உத்தியோகத்தர்களுடனும் ஜனாதிபதி அநுரகுமார கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார். படையினருக்கு மேலும் மருத்துவ மற்றும் சேவை வசதிகளை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற எயார்வைஸ் மார்ஷல் எச்.எஸ்.சம்பத் துய்யகொந்தா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ, மிஹிந்து செத் மெதுர பொறுப்பதிகாரி பிரிகேடியர் டபிள்யூ. ஜீ. எஸ். டீ. எஸ். ராஜகருணா, இராணுவ சேவைகள் மற்றும் புனர்வாழ்வுப் பணிப்பாளர் பிரிகேடியர் டபிள்யூ. ஏ. எஸ். விஜயதாச உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் ஏனைய பதவி நிலை அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

















# ராகம ரணவிரு செவன நல விடுதிக்கு பாதுகாப்பு பிரதி அமைச்சர் விஜயம்

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர ராகம "ரணவிரு செவன" நல விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வரும் படையினரின் நலன் குறித்து விசாரித்தார்.

தங்கியிருந்து சிகிச்சை பெற்று வரும் படையினரை நேற்று முற்பகல் சந்தித்து அவர்களின் தகவல்களைக் கேட்டறிந்த பிரதி அமைச்சர், அவர்களுடன் சுமுகமான உரையாடலிலும் ஈடுபட்டார்.

இதேவேளை, பிரதி அமைச்சர் அருண ஜயசேகர, "ரணவிரு செவன" நல விடுதியில் கடமையாற்றும் வைத்தியர்கள் தலைமையிலான உத்தியோகத்தர்களுடன் உரையாடலில் ஈடுபட்டதுடன், படையினருக்கு மேலும் வழங்கக்கூடிய மருத்துவ மற்றும் சேவை வசதிகள் தொடர்பிலும் கவனம் செலுத்தினார்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பானகொட, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் வி.பி. எதிரிசிங்க மற்றும் "ரணவிரு செவன" நல விடுதியின் இராணுவ நிர்வாகி பிரிகேடியர் டபிள்யூ.டீ.எம். குமாரசிங்க உட்பட முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரிகள் இதன்போது கலந்துகொண்டனர்.

# 16 ஆவது தேசிய படைவீரர்கள் தினத்தை முன்னிட்டு முப்படைகளில் 12 ஆயிரத்து 434 பேருக்குப் பதவி உயர்வு

16 ஆவது தேசிய படைவீரர்கள் தினத்தை முன்னிட்டு, முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அங்கீகாரத்துடன், முப்படைகளின் 217 அதிகாரிகள் மற்றும் ஏனைய படைவீரர்கள் 12 ஆயிரத்து 217 பேருக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி, இலங்கை இராணுவத்தின் 186 அதிகாரிகள் மற்றும் 10 ஆயிரத்து 93 இதர பதவிகள், இலங்கைக் கடற்படையின் 22 அதிகாரிகள் மற்றும் 1256 இதர பதவிகள், இலங்கை விமானப்படையின் 9 அதிகாரிகள் மற்றும் 868 ஏனைய பதவிகளுக்குப் பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# டெங்கு ஒழிப்பு வாரம் நேற்று முதல் ஆரம்பம்



டெங்கு ஒழிப்பு வாரம் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது.

டெங்கு அபாயம் அதிகமாகக் காணப்படும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளை உள்ளடக்கி டெங்கு ஒழிப்பு வாரம் முன்னெடுக்கப்படுகின்றது.

இதன்போது வீடுகள், பாடசாலைகள் உள்ளிட்ட அனைத்து சுற்றுப்புறங்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுமென தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்தது.

ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் 19,000 அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த காலப்பகுதியில் 07 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்தது.



# உள்ளூராட்சி மன்றங்களை இணைந்து நிர்வகிக்க கைகோர்க்கின்றன ஐ.தே.க, ஐக்கிய மக்கள் சக்தி

தேசிய மக்கள் சக்திக்கு பெரும்பான்மை இல்லாத உள்ளூராட்சி மன்றங்களில் ஏனைய எதிர்க்கட்சிகளுடன் இணைந்து நிர்வாகங்களை அமைப்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதன் போது, எதிர்க்கட்சிக்குப் பெரும்பான்மை கிடைத்துள்ள உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைப்பதில் உள்ள சிக்கல்கள் குறித்து விவாதிக்கப்பட்டதுடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றிப்பெற்ற ஏனைய கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி தலதா அதுகோரல ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# தேசபந்து தென்னகோனின் சட்டக் குழு முன்வைத்த ஆரம்ப ஆட்சேபனையை நிராகரித்த விசாரணைக் குழு

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் சட்டக் குழு முன்வைத்த ஆரம்ப ஆட்சேபனைகளை விசாரணைக் குழு நிராகரித்துள்ளதாக நாடாளுமன்ற செயலகம் தெரிவித்துள்ளது.

மேலும், 23 குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப்பத்திரிகையை விசாரணைக் குழு வழங்கியுள்ளது.

அதற்கமைய, மேலதிக விசாரணைக்காக, எதிர்வரும் 28 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் கூடுவதற்குக் குழு தீர்மானித்துள்ளதாக நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், அவரது பதவி துஷ்பிரயோகம் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரித்து அறிக்கை அளிப்பதற்கு நியமிக்கப்பட்ட, விசாரணைக் குழுவில் நேற்று பிற்பகல் முன்னிலையாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# சீரற்ற வானிலையால் 685 பேர் வரை பாதிப்பு



நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக நான்கு மாவட்டங்களில் 187 குடும்பங்களைச் சேர்ந்த 685 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம், மன்னார், திருகோணமலை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

பெய்துவரும் மழை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களினால் குறித்த மாவட்டங்களில் 177 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வகையில் கால் வைக்க சீனா விடா முயற்சி செய்து வருகின்றது. அது தெரிந்தது தான்.

பல தடவைகள் சறுக்கினாலும், சற்று முன்னேற்றம் என்ற பாணியில் இப்போது சீனப் பேராசிரியர் ஒருவரின் சிறப்புரை நிகழ்வு ஒன்று யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் பொருளியல் துறையின் ஏற்பாட்டில் பல்கலைக்கழகத்தின் பிரதான நிகழ்வு மண்டபமான கைலாசபதி கலையரங்கில் வெள்ளியன்று நடைபெற இருக்கிறது.

வருபவர் சீன நாட்டின் பொருளாதாரத் துறை வல்லுநர் என்று கூறப்பட்டாலும், அத்துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றவர் என்று கூறப்பட்டாலும், அதற்கு அப்பாலும் சில விடயங்களில் சிறப்புப் பெற்றவர். அவர் சீன மொழி, ஆங்கில மொழி ஆகியவை மாத்திரமல்ல, சிங்கள மொழியிலும் தேர்ந்தவர். சிங்கள மொழி மற்றும் இலக்கியத்தில் சித்தி பெற்ற கலைப் பட்டதாரி.

இத்தகையவரின் யாழ் வருகையில் நோக்கம் வெறும் பொருளியல் துறை சிறப்புரையுடன் அடங்கி விடாது என்பது திண்ணம்.

இப்படி சீனத் தரப்பு யாழ் பல்கலைக் கழகத்துக்குள் நுழையும் **break through** யாழ் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை ஊடாகத்தான் சாத்தியமாகி இருக்கின்றது. அது எதிர்பார்க்கப்பட்டது தான்.

இந்தப் பொருளியல் துறைக்கு சுமார் ஒன்றரை ஆண்டு காலத்துக்கு முன்னர் வரை துறைத் தலைவராக இருந்தவர் தமது மேற்படிப்பை சீனாவில் பூர்த்தி செய்தவர்.

ஏற்கனவே யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்துக்குத் தெரியாமல் – அதன் அனுமதி பெறாமல் – பல்கலைக்கழக மாணவர் அணி ஒன்றை சீனாவின் நிகழ்வுக்காக கொழும்புக்கு அவர் அழைத்துச் செல்ல முயன்றமை பற்றி நான் பத்திரிகையில் எழுத, எனக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்து மிக மோசமான வார்த்தைகளில் அவர் காட்டமாகத் திட்டித் தீர்த்த ஒலிப்பதிவு சமூக ஊடகங்களில் பரவி, அவர் யார் என்பது உலகின் முன் அம்பலமானமை பல வாசகர்களுக்கு நினைவு இருக்கலாம்.

அவர் இங்கு கட்டமைத்து வைத்துள்ள பொருளியல் துறை ஏற்பாடுகளுக்கு ஊடாகத்தான் இப்போது சீன பேராசிரியரின் வருகையும்சிறப்புரையும்யாழ். பல்கலைக் கழகத்தில் சாத்தியமாகி இருக்கின்றன என்று தெரிகின்றது.

பல்கலைக்கழகத்தில் கல்வி நிபுணத்துவம் சார்ந்த ஒருவர் ஏழு ஆண்டுகளுக்கு மேல் சேவை செய்தால் ஏழூாட்டை விடுப்பு **(sabbatical leave)** பெறத் தகுதியுடையவராகின்றார். சுமார் ஒன்றரை ஆண்டு காலம் பல்கலைக்கழகத்திற்கு வெளியில் – விரும்பினால் வெளிநாட்டில் – சம்பந்தப்பட்ட கல்விமானும் அவரது துணைவியாரும் வெளிநாடு போய் வருவதற்கான விமான பயணச் சீட்டு போன்றவற்றுடன் சம்பளத்துடன் கூடிய ஒன்றரை வருட விடுமுறையில் பணி செய்யப் போய் வரலாம். இந்த சிறப்புரிமையைப் பெற்றுக் கொள்கின்ற கல்விமான் மீண்டும் பல்கலைக்கழகத்திற்குத் திரும்பி மூன்று வருடங்களுக்குக் குறையாத காலம் தனது பணியைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பது கட்டாயம்.

நாம் குறிப்பிடும் மேற்படி பேராசிரியர் அத்தகைய சிறப்புரிமை விடுப்பு மற்றும் வசதிகள், கொடுப்பனவுகள் யாவற்றையும் எடுத்துக் கொண்டு ஒன்றரை வருடங்கள் கனடாவில் வேறு பணியுடன் நன்கு உழைத்த பின்னர், இப்போது நாடு திரும்பப் பின்னடிக்கின்றார் என்று தெரிகின்றது. தாம் நாட்டுக்குத் திரும்ப அஞ்சுகின்றார் என அவர் விளக்கம் அளிக்கிறார்.

இங்குள்ள சில கல்விமான்களால் தமது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும், அந்த அச்சுறுத்தலால் தாம் மனப் பாதிப்புக்கும், உளநோய்க்கும் உள்ளாகி, கனடாவில் சிகிச்சை பெறுகின்றார் எனவும் காரணங்கள் காட்டி, அவர் இப்போது யாழ் பல்கலைக்கழகத்திற்குப் பணிக்குத் திரும்பாமல் – பல்கலைக் கழகம் இதுவரை வழங்கிய வசதிகள், வாய்ப்புகள், வேதனங்களைப் பயன்படுத்திவிட்டு, மீண்டும் பணி செய்ய வராமல் – கனடாவில் நிலையாக டோரா போடத் தயாராகி விட்டார் எனத் தெரிகிறது. அதற்கான சமாளிப்பு விளக்க கடிதங்கள் இப்போது யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திற்கு கனடாவில் இருந்து அவரால் அஞ்சல் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இவ்வளவுக்கும் மத்தியில் கனடாவில் இருந்தபடி தாம் முன்னர் கல்வி கற்ற சீன தேசத்தின் மீதான தீராத பக்தி மற்றும் விசுவாச உணர்வின் அடிப்படையில் சீனத் தரப்பு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்குள் காலூன்றுவதற்கான வழிகாட்டலையும் அங்கிருந்தபடியே அவர் வழங்கி வருகிறார் எனக் கூறப்படுகிறது.

நல்ல உழைப்புதான்... நல்ல பிழைப்புத்தான் போங்கள்....!

---

## அநுரகுமார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை இடம்பெற்ற மூன்று தசாப்த கால யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமையுடன் 16 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில், இது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபையின் உத்தியோகபூர்வ "எக்ஸ்" தளத்தில் செய்யப்பட்டிருக்கும் பதிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

"உள்நாட்டுப்போர்முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு 16 வருடங்கள் பூர்த்தியாகும் மே 18 இல் முள்ளிவாய்க்காலில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் ஒன்றுகூடினர்.

வலிந்து காணாமல் ஆக்கப்படல் சம்பவங்கள் உள்ளடங்கலாக யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் பதிவான சர்வதேச சட்டங்களுக்குப் புறம்பான மிக மோசமான மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர் இன்னமும் நீதியையும், பொறுப்புக்கூறலையும் கோரி வருகின்றனர். இருப்பினும் அத்தகைய குற்றங்கள் எவையும் இடம்பெறவில்லை என இலங்கையின் கடந்தகால அரசாங்கங்கள் மறுத்து வந்திருப்பதுடன், நம்பத் தகுந்த விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் தவறியிருக்கின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போதைய புதிய அரசாங்கமேனும் கடந்தகால அரசாங்கங்களின் தோல்விகளைச் சீர்செய்து, நீதியையும் பொறுப்புக்கூறலையும் நிலைநாட்டுமா? அத்தோடு பாதிக்கப்பட்ட தரப்பினரின் நீதிக்கான கோரிக்கைக்குச் சர்வதேச சமூகமும் ஆதரவளிக்க வேண்டும்." – என்றுள்ளது.

---

## அமைதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்தீர்கள். நீங்கள் சிறந்த மனைவிமார். ஆனால், அதன் இறுதி முடிவு என்னவாகஇருக்கவேண்டும்?உங்கள்குழந்தை, உங்கள் கணவர், உங்கள் நண்பர், உங்கள் உறவினருக்கு நீங்கள் செய்யக்கூடிய மிக உயர்ந்த நீதி, இந்த நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதாகும். இந்த நினைவிடத்திற்கு முன், நாம் நின்று அவர்களுக்கு உரிய மரியாதை செலுத்துவது என்பது, மீண்டும் ஒரு மோதல் ஏற்பட இடமளிக்காமல், வெறுப்பு நிறைந்த சமூகத்திற்குப் பதிலாக சகோதரத்துவம், அன்புடன் கூடிய ஒற்றுமை நிறைந்த சமூகத்தை உருவாக்கத் தயார் என்ற உறுதிமொழியை எடுப்பதாகும்."

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பத்தரமுல்லை படைவீரர்கள் நினைவிடத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற 16 ஆவது படைவீரர்கள் தின நினைவு நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த தினத்தை நினைவுகூரும் நிகழ்வு நேற்று பிற்பகல் பத்தரமுல்லை படைவீரர்கள் நினைவிடத்திற்கு முன்பாக, முப்படைகளின் தளபதி, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதியின் முழுமையான உரை பின்வருமாறு:–

"எமது நாடு பல தசாப்தங்கள் யுத்தத்திற்கு முகங்கொடுத்தது. யுத்தம் எமது நாட்டுக்கும் மக்களுக்கும் பெரும் அழிவை தந்தது. பலவருடங்களின் பின்னர் யுத்தத்தை நிறைவு செய்ய முடிந்தது. யுத்தத்தை நிறைவு செய்ய உயிர்த்தியாகம் செய்த படையினரை நாம் இன்று நினைவு கூருகின்றோம். இது முக்கியமான வரலாற்றுத் தினமாகும். இது யுத்த நிறைவு தினம் மட்டுமன்றி மீண்டும் நாட்டில் யுத்தம் ஏற்படுவதைத் தடுக்க சிங்கள, தமிழ்,முஸ்லிம், பேர்கர், மலே, கிறிஸ்தவர் என சகல மக்களும் ஒரே நாட்டிற்குள் ஒற்றுமையாக நாட்டைக் கட்டியெழுப்பப் போராடுகின்றனர்.

யுத்தத்தை நிறைவு செய்ய எமது படையினர் உயிர்த் தியாகம் செய்தனர். இங்குள்ள நினைவுச் சின்னம் முழுவதும் அவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. யுத்தத்தால் பலர் அங்கவீனமுற்றனர். பலர் தமது உடல் உறுப்புகளை இழந்தனர். அவர்களின் உறவினர், குடும்பத்தினர் பெரும் தியாகம் செய்தனர். அவர்களை நாம் தினமும் நினைவில் கொள்ள வேண்டும். அவர்களுக்கு நாடு கடன் பட்டுள்ளது.

யுத்தம் என்பது பாரிய அழிவாகும். யுத்தத்தில் போராடிய நீங்கள் யுத்தம் எந்தளவு நாசகரமானது என்பதை அறிந்திருப்பீர்கள். யுத்தம் செய்த எவரும் யுத்தத்தைத் தொடர்ந்து எதிர்பார்த்து போராடவில்லை. அனைவரும் சமாதானத்தை எதிர்பார்த்தே போராடினர். வடக்கு – தெற்கு பேதமின்றி பெற்றோரை இழந்த பிள்ளைகள், பிள்ளைகளை இழந்த பெற்றோர், கணவரை இழந்த மனைவிமார் உள்ளனர். அவர்கள் கௌரவத்துடன் நினைவுத் தூபியில் தமது உறவினர்களின் பெயர்களைத் தேடுகின்றனர். இங்கு மாத்திரமா வடக்கிலும் இதே நிலைமை தான். தமது பிள்ளைகள், கணவர்மார்களின் புகைப்படத்தை வைத்துக் கொண்டு அவர்களின் உறவினர்கள் வீதியோரம் ஒப்பாரி வைக்கின்றனர்.

அனைத்து பெற்றோருக்கும் தமது பிள்ளைமுக்கியம்.பாரியஅழிவைசந்தித்த தாய்நாட்டில் அவ்வாறான யுத்தம் மீள ஏற்படுவதை தடுப்பது எமது பொறுப்பாகும். எமது சந்ததி சண்டையிட்டது. கோபமும் குரோதமும் பரவியது. ஆனால், எமது பிள்ளைகள் வாழும் இன்றைய சந்ததினருக்கு யுத்தம் செய்யாத, மோதல் அற்ற,கோபம்,

07

## அமைதியை...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)
சந்தேகத்திற்குப் பதிலாக நட்புறவு மற்றும் அன்புள்ள நாடு உருவாக்கப்பட வேண்டும்.

கடந்த கால சம்பவங்களில் இருந்து பாடம் கற்க வேண்டும். மீள அவ்வாறான நிலை எமது தாய்நாட்டில் ஏற்பட இடமளிக்கக் கூடாது . யுத்தமற்ற, குரோதமோ, சந்தேகமோ அற்ற நாடு உருவாக்கப்பட வேண்டும். மீண்டும் மோதல், குரோதம் உள்ள நாட்டுக்குப் பதிலாக சமாதானமான நாட்டை உருவாக்குவதே அவர்களுக்கு நாம் செய்யும் கௌரவமாகும்.

நாம் எதிர்கால சந்ததியினருக்குச் சமாதானமான நாட்டையே வழங்க வேண்டும். அதிகாரத்தைப் பெறவும் பாதுகாக்கவும் யுத்தம், மோதல் மற்றும் இனவாதத்தைக் கடந்த காலத்தில் பயன்படுத்தினார்கள். சரத் பொன்சேகா இரண்டரை வருடங்கள் சிறையில் இருந்தார். அவர் என்ன தவறு செய்தார்?அவருடன் நான் அன்று நெருக்கமாகப் பழகினேன்.

அதிகாரத்தைப் பலப்படுத்தவும் பாதுகாக்கவும் மேற்கொள்ளப்பட்ட யுத்தங்கள் மற்றும் மோதல்களினால் வடக்கிலும், கிழக்கிலும் உள்ள பிள்ளைகளே பாதிக்கப்பட்டனர். யுத்தத்திற்கு எந்தக் காரணமும் அற்ற பங்களிக்காத கிராமத்துப் பெற்றோரின் பிள்ளைகளே இறந்தனர். அங்கவீனமுற்றனர். இதுதான் அதனால் கிடைத்த அழிவாகும்.

மக்களால் புறக்கணிக்கப்பட்டோருக்கு யுத்தம் என்பது இனிய அனுபவம். நாம் சமாதானத்திற்காக ஒன்றிணைய வேண்டும். ஆனால், இன்று சமாதானம் என்பது காட்டிக்கொடுப்பின் சின்னமாக மாறியுள்ளது. நல்லிணக்கம் என்பது காட்டிக்கொடுப்பாக உள்ளது. யுத்தம் ஒருபோதும் வெற்றியை கொண்டுதருவதில்ல. படைவீரர்களிடமிருக்கும் ஆயுதத்தை பயன்படுத்த தேவையற்ற அமைதியான சமூகம் உருவாக வேண்டும்.

நாம் மனிதாபிமானத்திற்கும் மனிதத்துவத்திற்குமே அடிபணிய வேண்டும். இந்த பூமி போதுமான அளவு இரத்தத்தில் தோய்ந்துள்ளது. பெற்றோரும் உறவினர்களும் அதிகமதிகம் கண்ணீர் சிந்தியுள்ளனர். யுத்தத்தின் வேதனையை அனுபவித்துள்ளோம். மீண்டும் அத்தகைய நிலை ஏற்படுவதை தடுக்க வேண்டும். அனைவரும் சமாதானத்திற்காகவே ஆயுதம் ஏந்தினார்கள்.

யுத்தத்தின் நிறைவு என்பது சமாதானத்தை நிலைநாட்டுவதாகும். நாம் முழுமையான வெற்றியாளர்களாக மாற சமாதானத்தை நிலைநாட்ட வேண்டும். நாம் சமாதானத்திற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கத் தயார். நாட்டின் சமாதானத்திற்காகவே படைவீரர்கள் பங்களித்தார்கள். எதிர்காலத்திலும் சமாதானத்திற்காக பங்களிப்பார்கள்.

சமாதானத்தை நிலைநாட்டுவதே இறந்த படைவீரர்களுக்குச் செய்யும் கைங்கரியமாகும். இது கடினமான செயற்பாடு. வடக்கிலும் தெற்கிலும் அதிகாரத்திற்காக இனவாதம் மீண்டும் பயன்படுத்தப்படுகின்றது. தாய்நாட்டில் உண்மையான சமாதானம் நிலைநாட்டப்படவில்லை.

மண்சரிவு அபாயம் உள்ள 4 ஆயிரத்து 900 வீடுகள் உள்ளன. மழை பெய்யும் போது அதில் எங்கு மண்சரிவு ஏற்படும் என்ற அச்சம் ஏற்படுகின்றது. உலகில் எங்காவது மோதல் நடக்கும் போது எமது பொருளாதாரத்திற்கு எத்தகைய தாக்கம் ஏற்படும் என்ற அச்சம் தோன்றும். இத்தகைய நிலையில் இது சுதந்திரமான நாடா? பொருளாதார ரீதியாக வீழ்ந்த நாட்டில் எங்கு இறையாண்மை உள்ளது. பலமான பொருளாதாரமற்ற நாடாக இருக்கின்றோம். உலகில் கௌரமான நாடாக உயர பொருளாதார ஸ்தீர நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். குற்றங்கள், தொற்றுநோய்கள் அற்ற நாடு உருவாக வேண்டும். மோதல்களற்ற குரோதமற்ற நாடு உருவாக வேண்டும். அதன் ஊடாகவே பலமான இறையாண்மை ஏற்படும்.

இந்த தாய் நாட்டை நாம் நேசிக்கின்றோம். உலகில் சிறந்த நாடாக மாற்ற சமாதானமும் நல்லிணக்கமும் அவசியம். அதற்கான அனைத்து முடிவுகளையும் தைரியமாக எடுக்க வேண்டும். படையினர் காட்டிய அர்ப்பணிப்பு, தியாகம் மற்றும் தைரியம் என்பன இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதில் எங்களுக்கு நம்பிக்கையைத் தரும். அதற்காக நாம் அனைவரும் சேர்ந்து ஒரு புதிய போராட்டத்தை ஆரம்பிப்போம்.” - என்றார்.

## இன்று கூடுகின்றது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடிய நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் சபை அமர்வு நாட்கள் தொடர்பில் தீர்மானிக்கப்பட்டது என்று செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அதற்கமைய, இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.00 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான பாராளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து மு.ப 10.00 மணி முதல் மு.ப 11.00 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், மு.ப 11.00 மணி முதல் மு.ப 11.30 மணிவரையான நேரம் நிலையியற் கட்டளை 27(2)ன் கீழான கேள்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மு.ப 11.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரை உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இதனைத் தொடர்ந்து பி.ப 5.00 மணி முதல் பி.ப 5.30 மணி வரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்பு வேளையின்போதான பிரேரணை மீதான விவாதம் இடம்பெறவுள்ளது.

நாளை 21ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.00 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான நாடாளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து, மு.ப. 10.00 மணி முதல் மு.ப. 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 11.00 மணி முதல் மு.ப. 11.30 மணி வரை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்விக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து, மு.ப. 11.30 முதல் பி.ப. 5.00 மணிவரை 2003ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழான கட்டளை மற்றும் 2018ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழான அறிவித்தல் என்பன விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை ஒத்திவைப்பு வேளையின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நாளைமறுதினம் வியாழக்கிழமை மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.00 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான பாராளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. மு.ப 10.00 மணி முதல் மு.ப 11.00 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மு.ப 11.00 மணி முதல் மு.ப 11.30 மணிவரையான நேரம் நிலையியற் கட்டளை 27(2)ன் கீழான கேள்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மு.ப 11.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மற்றும் 2023ஆம் ஆண்டு 34ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான தீர்மானங்கள் என்பன விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை ஆளும் தரப்பினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை மீதான விவாதம் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.00 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான பாராளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து, மு.ப. 10.00 மணி முதல் மு.ப. 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 11.00 மணி முதல் மு.ப. 11.30 மணி வரை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்விக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து, மு.ப. 11.30 முதல் பி.ப. 5.00 மணிவரை குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் நடைபெறவுள்ளது. மேலும் 2025.05.08ஆம் திகதி முதலாவது மதிப்பீட்டுக்காகப் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் (நீக்குதல்) சட்டமூலத்திற்கு அரசியலமைப்பின் 121வது பிரிவின் கீழ் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டாவிட்டால் இது இரண்டாவது மதிப்பீட்டுக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை ஒத்திவைப்பு வேளையின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.







# முல்லைத்தீவு மாவட்ட மட்டத்தில் சிறப்புற இடம்பெற்ற நீச்சல் போட்டி

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு துறையினரின் ஒழுங்குபடுத்தலில் 2025ஆம் ஆண்டுக்கான முல்லைத்தீவு மாவட்ட மட்டத்திலான நீச்சல் போட்டி கடந்த சனிக் கிழமை மிகவும் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

முன்னாள் தேசிய மரதனோட்ட வீரர் கந்தசாமி பத்மநாதனின் நிதி அனுசரணையோடு குமுழமுனை கொட்டுகிணற்று பிள்ளையார் ஆலய நீச்சல் தடாகத்தில் மழைக்கு மத்தியில் போட்டிகள் சிறப்பாக இடம்பெற்றிருந்தன.

குறித்த போட்டியில் இளைஞர்களுக்கான 50 மீற்றர், 100 மீற்றர் நீச்சல் போட்டியும்,அஞ்சல்ஓட்டநீச்சலும்இடம்பெற்றிருந்தன. இந்த போட்டியில் வெற்றியீட்டிய வீர வீராங்கனைகளுக்கு பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு, சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வில், முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு பயிற்றுவிப்பாளர் இ.சகீதரசீலன், வடமாகாண உயிர்காப்பு இணைப்பாளரும் உயிர்காப்பு பரிசோதகரும் இலங்கை நீச்சல் பயிற்றுனருமான சி.சிறிஜெனனன், இலங்கை உயிர் காக்கும் நீச்சல் பயிற்றுவிப்பாளர் ஆர்.லஜீவன், முன்னாள் தேசிய மரதனோட்ட வீரர் கந்தசாமி பத்மநாதன், புலம்பெயர் உறவு கந்தசாமி நுட்பராசா மற்றும் சமூக ஆர்வலர்கள், முல்லைத்தீவு மாவட்ட இளைஞர், யுவதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து சிறப்பித்திருந்தார்கள்.













# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பின்னடைவு தவிர்க்க முடியாதது

இந்த நாட்டில் ஒருபுறம் மிக மோசமான யுத்தக் கொடூரங்களில் படுகொலையுண்ட பல்லாயிரம் பொதுமக்களை நினைவு கூரும் நிகழ்வுகள் - நினைவேந்தல்கள் - சோகத்துடன் நடக்கின்றன. முள்ளிவாய்க்காலிலும், வடக்கு, கிழக்கின் பிற இடங்களிலும், ஏன் தென்னிலங்கையிலும் கூட, முள்ளிவாய்க்கால் கஞ்சியோடு நினைவேந்தல்கள் இடம்பெறுகின்றன.

மறுபுறம் பயங்கரவாத நிகழ்வுகளைத் தோற்கடித்த வெற்றி கொண்டாட்டங்கள் என்ற பெயரில் ஆரவாரங்கள், அரச விழாக்கள் தெற்கில் முன்னெடுக்கப்படுகின்றன.

ஒரு வகையில் பார்த்தால் இரண்டுமே ஒன்றுக்கொன்று எதிரானவை அல்லது முரணானவை.

யுத்தம் முடிவுற்ற பின்னர் கடந்த பதினாறு ஆண்டுகளாக நீடிக்கும் முரணிலை இதுதான்.

வடக்கு - கிழக்கு ஒரு புறமாகவும், தெற்கு ஒரு புறமாகவும் இலங்கை தீவு துருவமயப்படுத்தப்பட்டு இருப்பதை இந்த நிகழ்வுகள் - ஒரு புறம் சோக அனுஷ்டானங்களும், மறுபுறம் வெற்றிக் கொண்டாட்டங்களும் - அம்பலப்படுத்தி நிற்கின்றன.

முப்பது வருட காலம் இந்த நாட்டை சின்னாபின்னப்படுத்திய இன யுத்தத்தின் விளைவு இது.

இந்த யுத்தத்தில் வெற்றி பெற்றுவிட்டதாக மார்தட்டும் தென்னிலங்கை, இன்னமும் அந்த யுத்தத்துக்கான மூல காரணங்களை தேடி அறிந்து, அவற்றுக்கான தீர்வை நாடாமல் - காணாமல் - இருப்பதுதான் பெரும் அபத்தம். இந்தப் பேரழிவிலிருந்து - பேரழிவிலிருந்து - கற்றுக்கொண்ட பாடங்களை, பட்டறிவை, சரியாகப் புரிந்து கொள்ளாமையின் விளைவுதான், யுத்தத்தின் மூல காரணத்தைத் தேடி, அதற்கான தீர்வை நாடாமல் இருக்கும் அறிவிலித்தனம்.

இதனைத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறார். அதற்கான காரணங்களையும் அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

“1948 ஆம் வருட குடியுரிமை - வாக்குரிமை பறிப்புச் சட்டங்கள், சிங்களம் மட்டும் சட்டம், பண்டா - செல்வா மற்றும் டட்லி - செல்வா ஒப்பந்தங்கள் மற்றும் சந்திரிகாவின் 2000 ஆம் வருட தீர்வுத் திட்டம் ஆகியவை அகௌரவமான முறைகளில் உதாசீனப்படுத்தப்பட்டமை, 13 ஆம் திருத்தம் முழுமையாக அமுல் செய்யப்படாமை, பல இனங்கள், மதங்கள், மொழிகள் கொண்ட இலங்கையின் பன்முகத் தன்மை அங்கீகரிக்கப்படாமை, கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுல் செய்யப்படாமை, யுத்தத்தின் பின் மஹிந்த - பான் கி மூன் வெளியிட்ட கூட்டறிக்கை அலட்சியப்படுத்தப்பட்டமை, ஆகிய தவறுகளைத் திருத்தி முன் நகர முடியாவிட்டால் எமது நாட்டின் தேசிய பயணம் நின்ற அதே இடத்திலேயே நிற்கும்.” - என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதில் ஒரு சிறிய திருத்தம். தவறுகளைத் திருத்தி முன் நகராவிட்டால் நாட்டின் தேசியப் பயணம் இப்போது நிற்கும் இடத்தில் நிற்காது. மீண்டும் யுத்த காலத்தையொட்டிய பின்னடைவு நிலைக்கு அது செல்வது தவிர்க்க முடியாததாக இருக்கும். ஆட்சியாளர்களுக்கு இது புரிந்தால் நல்லது.

# இந்தியா சத்திரம் அல்ல: உயர் நீதிமன்றம் கருத்து



இந்தியாவில் அடைக்கலம் கோரிய இலங்கையர் ஒருவரின் மனுவை நிராகரித்த இந்திய உயர்நீதிமன்றம், உலகம் முழுவதிலுமிருந்து வரும் அகதிகள் தங்குவதற்கான சத்திரம் இந்தியா அல்ல என, வாய்மொழியாகக் குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் 2015 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்ட மேற்படி நபருக்கு எதிராக, 2018 ஆம் ஆண்டில் சென்னை மேல் நீதிமன்றம் 7 வருடச் சிறைத்தண்டனையை விதித்தது.

இந்த தண்டனைக் காலம் நிறைவடைந்ததும், உடனடியாக இந்தியாவை விட்டு வெளியேறுமாறு அவருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்ததுடன், அதனைச் சவாலுக்கு உட்படுத்தி மேற்படி இலங்கையர் இந்திய உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கில் மனுதாரரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, மேற்படி நபர் சட்டபூர்வமாக இந்தியா வந்தவர் என்றும், அவரது சொந்த நாட்டில் அவரது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும், சமர்ப்பணங்களை முன்வைத்துள்ளார்.

அதன்போது, உலகம் முழுவதிலுமிருந்து வரும் அகதிகளை இந்தியா வரவேற்க வேண்டுமா என்றும், ஏற்கனவே 140 கோடி பேருடன் போராடி வருகின்ற இந்தியா, வெளிநாட்டினரை மகிழ்விக்கக்கூடிய ஒரு சத்திரம் அல்ல எனவும், இந்திய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் ஆயத்தின் தலைமை நீதியரசர் தீபங்கர் தத்தா குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து, தமது சேவை பெறுநரின் உயிருக்கு இலங்கையில் அச்சுறுத்தல் இருப்பதாக மனுதாரரின் சட்டத்தரணி தொடர்ந்து வலியுறுத்திய போதிலும், நீதிமன்றம் அவரை வேறு நாட்டிற்குச் செல்லுமாறு கோரியதுடன், அவரது மனுவையும் நிராகரித்ததாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# விஷாலுடன் ஓகஸ்ட் 29 இல் திருமணம்: உறுதி செய்தார் நடிகை சாய் தன்ஷிகா



நடிகர் விஷாலுடன் தனக்கு திருமணம் ஆக இருப்பதை நடிகை சாய் தன்ஷிகா உறுதி செய்துள்ளார்.

'யோகிடா' படத்தின் "ட்ரெய்லர்" வெளியீட்டு விழாவின் பொது அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

நடிகர் சங்க கட்டிடம் முடிந்து, அதில்தான் திருமணம் செய்வேன் என்று கூறியிருந்தார் விஷால். அவருக்கு சில காதல் தோல்விகளும் ஏற்பட்டன. இதனால் யாரை திருமணம் செய்யவுள்ளார் என்ற கேள்வியும் எழுந்தது. இந்தப் பின்னணியில், சாய் தன்ஷிகாவை தான் விஷால் திருமணம் செய்துகொள்ள இருக்கிறார் என்று நேற்று காலை முதல் தகவல் பரவியது.

'கபாலி', 'பேராண்மை', 'பரதேசி' உள்ளிட்ட பல படங்களில் நடித்து பிரபலமானவர் சாய் தன்ஷிகா. சில வருடங்களாக விஷால் – சாய் தன்ஷிகா காதலித்து வருகிறார்கள் என்றும் நட்பாக பேசத் தொடங்கி, பின்பு காதலாக மாறிவிட்டது என்று கூறப்பட்டது.

இந்த நிலையில்நேற்று சென்னையில் சாய் தன்ஷிகா நடித்த 'யோகிடா' படத்தின் இசை மற்றும் "ட்ரெய்லர்" வெளியீட்டு விழா நடைபெற்றது. இதில் விஷால் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ட்ரெய்லரை வெளியிட்டார்.

இதன்போது மேடையில் பேசிய சாய் தன்ஷிகா விஷாலுக்கும் தனக்கும் எதிர்வரும் ஓகஸ்ட் 29 ஆம் திகதி திருமணம் நடைபெற இருப்பதை உறுதி செய்தார். இருவருக்கும் ரசிகர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

# இந்தியா சத்திரம் அல்ல என்று உயர் நீதிமன்றம் கூறியிருப்பது மனிதாபிமானத்துக்கு எதிரானது

## திருமாவளவன் தெரிவிப்பு



"இலங்கைத் தமிழர் ஒருவரின் வழக்கில் 'இந்தியா சத்திரம் அல்ல' என்று உச்ச நீதிமன்றம் கூறியிருப்பது மனிதாபிமானத்துக்கு எதிரானது" என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

வடகாடு மோதல் சம்பவத்தைக் கண்டித்து புதுக்கோட்டையில் வி.சி.க.சார்பில் நேற்று திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதில், அக்கட்சியின் தலைவர் திருமாவளவன் உள்ளிட்டோர் பேசினர். முன்னதாக செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது,

"பிற நாடுகளில் இருந்து வருவோருக்கு எல்லாம் இடம் கொடுப்பதற்கு இந்தியா ஒன்றும் சத்திரம் அல்ல என்று இலங்கைத் தமிழர் ஒருவரின் வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறி இருப்பது மனிதாபிமானத்துக்கு எதிரானது.

புலம் பெயர்வது அனைத்து நாடுகளிலும் நிகழக் கூடியது. புலம் பெயர்வை சட்டத்தின் மூலமோ, எல்லைகளின் மூலமோ தடுத்துவிட முடியாது. மனிதாபிமானத்தின் அடிப்படையில் தஞ்சம் புகும் மக்களுக்கு அடைக்கலம் கொடுப்பது அரசின் தலையாய கடமை." என்று அவர் தெரிவித்துள்ளார்.

# காஸா முழுவதையும் கட்டுக்குள் விரைவில் கொண்டு வருவோம்

## இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவிப்பு

காஸா முழுவதையும் கட்டுக்குள் கொண்டு வருவோம் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டு முதல் பலஸ்தீனம் மீது இஸ்ரேல் போரை தீவிரப்படுத்தி வருகின்ற நிலையில், இதுவரை இஸ்ரேலின் தாக்குதலில் 60,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்று நாள்களில், காஸாவில் சுமார் 500 இற்கும் மேற்பட்டோர் இஸ்ரேலின் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில், நேற்று திடீரென பலத்தீனத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு கொண்டு செல்லும் ட்ராக்குகளை இஸ்ரேல் அனுமதித்தது.

இருப்பினும், ஹமாஸை முற்றிலும் ஒழிக்க முடியாமல் திண்டாடும் இஸ்ரேல், காஸா பகுதி முழுவதையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர உள்ளதாக பிரதமர் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஹமாஸுடன் சண்டை தீவிரமாக இருக்கிறது, நாங்கள் முன்னேறி வருகிறோம்.

விரைவில் காஸா முழுவதையும் கட்டுக்குள் கொண்டு வருவோம், இதில்



நாங்கள் விட்டுக்கொடுக்க மாட்டோம்.

எங்கள் வெற்றியை தடுக்க முடியாத வகையில் நாங்கள் செயல்படுவோம்.” என தெரிவித்துள்ளார்.

இது குறித்த காணொலி வெளியாகி பல்வேறு தரப்பில் இருந்து கண்டனங்கள் எழுந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 3 நாள்களில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 500 இற்கும் மேற்பட்டோர் காசாவில் பலி



காசாவில் கடந்த 3 நாள்களில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் சுமார் 500 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

காசாவில் ஹமாஸ் அமைப்பிற்கும் இஸ்ரேலுக்கும் இடையில் தொடர்ந்து மறுகல் நிலை அதிகரித்த வண்ணமே உள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் பலஸ்தீனம் மீது இஸ்ரேல் போரை தீவிரப்படுத்தி வருகிறது.

இந்த போரில் கொல்லப்பட்ட பலஸ்தீன பொதுமக்களின் எண்ணிக்கை இதுவரை 60,000 ஐ கடந்திருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுப்பப்பட்ட உணவு, மிக குறைந்த அளவே உள்ளே அனுமதிக்கப்பட்டு வந்தது.

இஸ்ரேல் மீது கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 3 ஆம் திகதி தாக்குதலை நடத்தியது. இதற்கு பதிலடி கொடுக்கவும், ஹமாஸை முற்றிலுமாக ஒழிக்கிறேன் எனவும் இஸ்ரேல் தீவிரமான போரை கையில் எடுத்திருக்கிறது. இந்த போர் ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் நடந்து வருகிறது.

ஆனால் ஹமாஸை முற்றிலுமாக ஒழிக்க முடியவில்லை. இப்படி இருக்கையில்தான் காசா பகுதியை முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக்கொள்வதாக நெதன்யாகு அறிவித்திருக்கிறார்.

சரி இந்த பிரச்சினைக்கு என்னதான் தீர்வு என்று கேட்டால், நாங்கள் பேச்சுவார்த்தைக்கு தயார். ஆனால் ஹமாஸ் முற்றிலுமாக காசாவை விட்டு வெளியேற வேண்டும், காசா ஆயுதம் இல்லாத பகுதியாக இருக்க வேண்டும் என்றெல்லாம் நடைமுறைக்கு சாத்தியமில்லாத நிபந்தனைகளை நெதன்யாகு விதித்துள்ளார்.

இவ்வாறான பின்னணியில் இந்த பிரச்சனையை ஈரான் உற்று நோக்கி வருகிறது. ஹமாஸுக்கு ஆதரவாக ஈரானின் ஹவுதி குழுக்கள் தாக்குதலை மேற்கொண்டு வந்தன.

இப்போது ஹமாஸை இஸ்ரேல் நெருக்குவதால், இதில் ஈரான் தலையிடவும் வாய்ப்பு இருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.



# சுவாமி விபுலானந்தரின் கருங்கல் சிலை திறப்பு விழாவில் காரைதீவிலிருந்தும் பற்றாளர்கள் ஈடுபாட்டுடன் பங்கேற்பு

**(வி.ரி. சகாதேவராஜா)**

உலகின் முதலாவது தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 15 அடி உயரக் கருங்கல் கற்சிலை மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகில் நேற்று முன்தினம் மாலை திறந்துவைக்கப்பட்டபோது காரைதீவில் இருந்தும் பற்றாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

அடிகளார் பிறந்த காரைதீவு மண்ணில் இருந்து சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணி மன்றத்தினர் மற்றும் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

“விடிவானம் கண்ட கிழக்கொளியே! “ என்ற மகுடத்திலான வாழ்த்து மடல் அங்கு பணி மன்றத்தால் காரைதீவு மக்கள் சார்பாகக் கையளிக்கப்பட்டது.

மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் நூற்றூண்டு சபையின் தலைவர் க.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கொழும்பு இராம கிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தா பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிலையைத் திறந்து வைத்தார்.











# திரும்பத் திரும்ப கஜேந்திரகுமார் பொய் கூறுகின்றமையால் அது உண்மையாகிவிடாது என்கின்றார் சி.வீ.கே.சிவஞானம்

தமிழ் மக்களுக்காக தமிழ்க் கட்சிகள் ஒற்றுமைப்படுகின்ற முயற்சிகளை தமிழரசுக் கட்சி ஒருபோதும் குழப்ப வில்லை. அவ்வாறு ஒன்றுபடுகின்ற முயற்சி தமிழரசுக் கட்சியே குழப்புவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூறு வது முற்றிலும் தவறு.

– இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ள தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வீ. கே.சிவஞானம் அதற்கான நேர காலம் வருகிற போது கூட்டாகப் பேசுவதற்கு தயார் எனவும் அறிவித்துள்ளார்.

தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை முயற் சிக்குத் தமிழரசுக் கட்சியே தடையாக இருந்து குழப்புவதாக முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் முன்வைத்த குற்றச்சாட்டு தொடர்பில் நேற்றைய ஊடக சந்திப்பின் போது எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நடை



பெற்ற இந்த ஊடக சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்த் தேசியத்துடன் தமிழ் மக்கள் ஒன்றுதிரள்வது போன்று, தமிழ்த் தேசியக் கட்சிகளும் தமிழ் மக்களுக்காக ஒற்றுமையாக செயற்பட வேண்டும். அவ்வாறான ஒற்றுமைக்கு நாங்கள் எப்போதும் தயார்.

ஆனால் அரசாங்கமே அறிவிக்காத ஒரு விவகாரம் தொடர்பில் நாம் ஒன்று சேர்ந்து எதனைப் பேச முடியும்? ஆகவே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அரச மைப்பு ஒன்றை முன்வைத்தால் அது குறித்து நாம் நிச்சயம் பேசலாம்.

ஆனபடியினால் அரசாங்கம் முதலில் அத்தகைய நடவடிக்கை எத னையும் எடுத்து அறிவிக்கட்டும். அவ் வாறு அறிவிக்கிற போது நாம் கூட்டா கவும் அது குறித்துப் பேசத் தயாராக உள்ளோம்.

மேலும் இந்த ஒரு விவகாரத்தை வைத்துக் கொண்டு தமிழரசுக் கட்சி தான் குழப்புகிறது என மீண்டும் மீண்டும் பல இடங்களிலும் கஜேந்திரகுமார் குற்றஞ்சாட்டி வருகிறார்.

அவ்வாறு அவர் திரும்ப திரும்ப ஒரே கதையை கூறுவதனால் அது உண்மையாகிவிடாது. உண்மையில் நாங்கள் குழப்புவதாக கஜேந்திரகுமார் கூறுவது பிழை. அவர் கூறுவது முற்றி லும் தவறானது.

ஆகவே நாம் திரும்பவும் சொல்கி றோம். தமிழ் மக்களுக்கான எந்தவொரு விடயத்திற்கும் தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை முயற்சியை நாங்கள் குழப்பவில்லை. நாங்கள் கூட்டாக பேச வும் தயாராக உள்ளோம். – என்றார்.




# மட்டக்களப்பு மறை மாவட்ட முன்னாள் ஆயர் பொன்னையா ஜோசெப் ஆண்டகை பிரிந்தார்

**(பழுவூரான், எஸ்.எஸ். அமிர்தகழியான்)**

முன்னாள் மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய பொன்னையா ஜோசெப் ஆண்டகை நேற்று திங்கட்கிழமை காலை இயற்கை எய்தினார்.

மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் யோசப் பொன் னையா ஆண்டகை இன்று இறையடி சேர்ந்துள்ளார் என ஆயர் இல்லம் அறிவித்துள்ளது.

இவர் கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக சுகயீனமுற்றிருந்த நிலையில் நேற்றுத் தனது 74 வது வயதில் இறை யடி சேர்ந்துள்ளார்.

கலாநிதி யோசப் பொன்னையா ஆண்ட இலங்கையின் கிழக்கு மாகா ணத்தின் மட்டக்களப்பு, தன்னாமுனை என்ற ஊரில் 1952 அக்டோபர் 12 ஆம் திகதி பிறந்துள்ளார்.

அன்னார் புனித வளனார் சிறிய குருமடத்திலும், திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியிலும் கல்வி கற்று, திருச்சிராப்பள்ளி புனித பவுல் குருமடத்தில் உயர் கல்வி கற்று, மெய்யி யலில் இளங்கலைப் பட்டமும், புனேயில் உள்ள தேசிய குருமடத்தில் பயின்று இறையியலில் இளங்கலைப் பட்டமும் பெற்றார்.

அத்துடன் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் இளங்கலைப் பட்டதாரி யுமான இவர் ரோம் மறைமாவட்ட நகரப் பல்கலைக்கழகத்தின் விவிலிய இறை யியல் பட்டமும் (1993), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முனைவர் பட்டமும் பெற்றுள்ளார்.

யோசப் பொன்னையா 1980 ஏப்ர லில் கத்தோலிக்க அருட்தந்தையாக பணியிலமர்த்தப்பட்டார். இவர் பங்கு தந்தையாக மட்டக்களப்பு தூய மரியாள் இணைப்பேராலயம் (1980-82), வாகரை, வீச்சுக்கல்முனை, ஆயித்திய மலை ஆகியவற்றில் பணியாற்றினார்.

மட்டக்களப்பு புனித வளனார் சிறிய குருமடத்திலுல் பணிப்பாளராகப் (1993-96) பணியாற்றிய பின்னர் அம்பிட்டி தேசிய குருமடத்தில் (1996-2001) பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.

2001-06 காலப்பகுதியில் தாண்ட வன்வெளி பங்கு தந்தையாக பணி யாற்றிய பின்னர் 2006 இல் திருகோ ணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத் தின் பதில் பொறுப்பாளராகப் பதவி யேற்றார். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

2008 பெப்ரவரியில் திருகோண மலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் துணை - ஆயராக நியமிக்கப்பட்டு, 2008 மே மாதத்தில் அதன் ஆயராகப் பதவியேற்றார்.

அதன் பின்னர் 2012 இல் மட்டக் களப்பு மறைமாவட்டத்தின் முதலாவது ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். மட்டக்களப்பு மறை மாவட்டத்திற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்தே முதன் முறையாக தெரிவு செய்யப்பட்ட ஆயராக இவர் திகழ்ந்தமை குறிப் பிடத்தக்க விடயமாகும்.

இவரது இறுதிக் கிரியைகள் தொடர் பாக பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிசிக்கப்பட்டது.

அவரது பூதவுடல் அஞ்சலிக்காக மட்டக்களப்பு தாண்டவன்வெளி வயோதி பர் மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இவருக்கு அருட்தந்தையர்கள்,அருட் சகோதரிகள் மற்றும் வயோதிபர் மடத் திலுள்ளோர் அஞ்சலி செலுத்துகின் றனர்.

இந்நிலையில் தனது நீண்டநாள் நண்பர் வண. பிதா பொன்னையா ஜோசெப் ஆண்டகைக்கு, நட்பு மரியா தையின் நிமித்தம் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் தேசமாணி ஏ.எல்.எம்.மீராஸ ாகிப் தனது மரியாதையைச் செலுத்திச் சென்றமையைக் காண முடிந்தது.



# பேசாலை கடற்கரையோரம் கனிய மணல் அகழ்வுக்காக நில அளவை செய்யும் முயற்சி நேற்றும் தடுக்கப்பட்டது!

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் பேசாலை ஐம்பது வீட்டு திட்ட கடற்கரையோரப் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான காணியில், நேற்றைய தினம் திங்கட்கிழமை மதியம் கனிய மணல் அகழ்வுக்கான நில அளவை முன்னெடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலையீட்டினால் அந்த நடவடிக்கை இடைநடுவில் கைவிடப்பட்டு, நில அளவைக்கு என கொழும்பு தலைமையகத்தில் இருந்து வருகை தந்தவர்கள் திரும்பிச் சென்றனர்.

மன்னார் பிரதேச செயலாளரினால் கரையோர பாதுகாப்புதிணைக்களத்தின் அனுமதியும், நீரியல் வளத்துறை திணைக்களத்தின் அனுமதியும் பெற்றுக் கொண்டு நில அளவை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அதற்கு மாறாக அவர்கள் மன்னாரில் இருக்கும் நில அளவை திணைக்களத்தை நாடாமல், கொழும்புத் தலைமையகத்தில் உள்ள நில அளவை திணைக்களத்தில் இருந்து வந்த அலுவலர்களுடன் ட்ரோன் மூலம் இப் பிரதேசத்தை அளப்பதற்கு குறித்த பகுதிக்குச் சென்றுள்ளனர்.

மன்னார் மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் கவனத்திற்கு இவ்விடயம் கொண்டு செல்லப்பட்ட நிலையில், பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன், மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மீனவ அமைப்பு, பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் அந்தப் பகுதிக்கு விரைந்தனர்.

நில அளவை திணைக்களத்தினர் மாஸ் மினரல் நிறுவனத்தினால் அழைத்து வரப்பட்ட நிலையில், அவர்கள் இங்கு வந்து நில அளவையை மேற்கொள்ள நடவடிக்கை முன்னெடுத்தனர் என மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார் தெரிவித்தார்.

உரிய முறையில் அனுமதி ஏதும் பெற்றுக் கொள்ளாமல் அந்தப் பகுதிக்கு அவர்கள் வருகை தந்து ட்ரோன் கமரா மூலம் நில அளவையை மேற்கொள்ள நடவடிக்கைகளை முன்னெடுத்தனர் எனக் கூறப்பட்டது.

இந்த நிலையில் இவ்விடயம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. இது தொடர்பாக இம்மாத இறுதியில் மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட உள்ளதாகவும், அதன் பின்னர் இவ்விடயம் குறித்து தீர்மானம் எடுக்கப் பட்டதன் பின்னர் இந்த நடவடிக்கையைத் தொடர்வதா இல்லையா என்பது குறித்து முடிவெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்து கொழும்பில் இருந்து வருகை தந்த நில அளவைத் திணைக்களத்தினர் நில அளவீட்டு நடவடிக்கையைக் கை விட்டுச் சென்றனர்.

இதேவேளை அந்தப் பகுதிக்குச் சென்ற மன்னார் மாவட்டப் பிராந்திய ஊடகவியலாளர்களுடன் சம்பந்தப்பட்ட குழுவினர் முரண்பாட்டில் ஈடுபட்டனர் எனவும் தெரிய வருகிறது.

"எதிர்வரும் 28 ஆம் திகதி இடம்பெற உள்ள மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் நில அளவைக்கான அனுமதியை வழங்கப் போவதில்லை. இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படக் கூடாது. இதனால் மன்னார் தீவு முழுமையாக பாதிக்கப்படும். எனவே கரையோர மணல் அகழ்வுக்கு மன்னார் மக்கள் ஒருபோதும் அனுமதி வழங்க மாட்டார்கள்" என பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்தார்.







# வவுனியா மேல் நீதிமன்றத்தால் நேற்று கஞ்சா உள்ளிட்ட பொருள்கள் அழிப்பு

(கி.வசந்தன்)

வவுனியா மேல் நீதிமன்றத்தால் ஐம்பதுக்கும் மேற்பட்ட வழக்குகளுடன் தொடர்புடைய சான்று பொருள்கள் மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.நிஹால் முன்னிலையில் அழிக்கப்பட்டன.

வவுனியா, மடுகந்த காட்டுப் பகுதியில் நேற்று இவை அழிக்கப்பட்டன.

கடந்த 2024, 2025 ஏப்ரல் வரையான காலப்பகுதிகளுக்குரிய ஐம்பதுக்கும் மேற்பட்ட வழக்குகளுடன் தொடர்புடைய கஞ்சா உள்ளிட்ட பல்வேறு சான்றுப் பொருட்களே வழக்குகள் நிறைவடைந்த நிலையில் இவ்வாறு அழிக்கப்பட்டன.

பொலிஸ் பாதுகாப்புடன் எடுத்து வரப்பட்ட இந்தப் பொருள்கள் மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் தீயில் எரித்து அழிக்கப்பட்டன.





# 187 குடும்பங்களைச் சேர்ந்த 685 பேர் மழையால் பாதிப்பு




(உடப்பு க.மகாதேவன்)

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக நான்கு மாவட்டங்களில் 187 குடும்பங்களைச் சேர்ந்த 685 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம், மன்னார், திருகோணமலை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. பெய்துவரும் மழை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களினால் இந்த மாவட்டங்களில் 177 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.




# 195 நாடுகளின் தலைநகரின் பெயர்களை 5 நிமிடங்களில் கூறி குழந்தை சாதனை

## சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடிப்பு

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு கொம்மாந்துறையைச் சேர்ந்த 2 வயதும் 10 மாதம் கொண்ட கிஷன்ராஜ் தன்யஸ்ரீ195 நாடுகளின் தலை நகரங்களின் பெயர்களை 5 நிமிடம் 24 செக்கனில் தெரிவித்து சோழன் உலகசாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

இந்த சாதனை நிகழ்வு கடந்த சனிக்கிழமை மக்கள் உதவிகள் மக்கள் பவுண்டேசன், அனுசரனையுடன் மட்டக் களப்பு கிறீன் காடின் ஹோட்டலில் சோழன் உலக சாதனைப் புத்தகத்தின் இலங்கைக் கிளையின் செயலாளர் கதிரவன் ரி.இன்பராசா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியா மட்டு. மாநகரசபை ஆணையாளர் நா.தனஞ்சயன் மற்றும் அதிதிகளாக செங்கலடி மத்திய மாவித்தியாலய அதிபர் க.சிவயேஸ்வரன், கல்குடா ஆசிரியர் ஆலோசகர் சுகந்தி நிறஞ்சன் மற்றும் சோழன் உலக சாதனை புத்தக அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

இதன் போது அந்தக் குழந்தை மிகக் குறைந்த நிமிடங்களில் 195 நாடுகளின் தலைநகரின் பெயர்களை ஒப்புவித்து சோழன் சாதனை புத்தகத் தில் இடம் பிடித்தார். இவ்வாறு சாதனை பிடித்த குழந்தைக்கு பதக்கங்கள் அணிந்து வெற்றி கேடயம் மற்றும் சான்றிதழ்களை அதிதிகள் வழங்கி கௌரவித்தனர்.






# நல்லூரான் உற்சவ வளாகத்தில் அசைவ உணவகம் இயங்குவதா?

## ஆட்சேபித்து இன்று மாலை கவனவீர்ப்பு

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோயில் அருகே திறக்கப்பட்டுள்ள அசைவ உணவகத்தை மூட வலியுறுத்தி சைவ அமைப்புக்களின் ஏற்பாட்டில் இன்றைய தினம் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்பாக இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

நல்லூரான் உற்சவ வளாகத்தில் திறக்கப்பட்டுள்ள அசைவ உணவகத்திற்கு எதிரான கவனவீர்ப்புப் போராட் டத்தில் அனைத்து சைவ சமயிகளும் அணிதிரண்டு எதிரப்பை பதிவு செய்யுமாறு அகில இலங்கை சைவ மகா சபை வலியுறுத்தியுள்ளது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் ‘காலைக்கதிர்’ நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

26

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



*ரணிலின் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த சமாதான முயற்சிகளை முறியடிப்பதற்காக ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான சிறிலங்கா சுதந்திர கட்சியோடு ஜே.வி.பி. 2004 ஜனவரியில் புரிந்து ணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்த போது எடுக்கப்பட்ட படம். சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவும் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவும் ஒப்பமிடுகின்றனர். இந்த உடன்பாடு கண்டு இரண்டு மாதங்களில் ரணில் அரசை நேரத்துடனேயே கலைத்து சமாதான முயற்சிகளுக்கு ஆப்படித்தார் சந்திரிகா.*

நல்லிணக்கம், எங்களை நம்புங்கள், நாங்கள் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவோம் என தேர்தல் காலங்களில் இருந்து தேசிய மக்கள் சக்தி - ஜே.வி.பி. வாய் நிறையப் பேசுகிறார்கள்.

சரி, நல்லிணக்கம் காட்டலாம், அவர்களை நம்பி முன்னேறலாம்.

ஆனால், அவர்கள் தமிழ் மக்களது அபிலாசைகள் என எதைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்? எதை நிறைவேற்றுவோம் எனப் பேசுகிறார்கள்?

அவற்றில் தெளிவு தேவை. எந்த கொள்கையையும் இனப் பிரச்சினைக்கு என்று முன்வைக்காது, அவர்கள் புதிய அரசியல் யாப்பு எல்லா தரப்பினருடனும் கலந்து ஆக்கும் வரை தற்போதைய அரசமைப்புச் சட்டத்தில் உள்ள 13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்துவோம் என்கிறார்கள். அத்தோடு ஆக்கப்படும் அரசியல் யாப்பை நல்லாட்சி காலத்தில் இணங்கியவாறே, ஏன் அதற்கு மேலும் போய், சமாதானப் பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில் ஏற்படுத்தலாம் என்கிறார்கள்.

இவை சில பகுதிகளில் கேட்கப்பட்டாலும், அரசியல் கட்சிகளின் வழமை போல, ஆணித்தரமாய் எல்லா மக்களுக்கும் அப்படிப் பரப்புரை செய்யப்படவில்லை. ஒரு நாடுதான். ஆனாலும் இவற்றை வெளிப்படுத்த இரண்டு பகுதிகள் உண்டு. ஆகவே வாக்கு வரவுக்கு ஏற்றபடி பேச்சுக்கள்.

கட்டுரையில் இதுவரை ஜே.வி.பியின் ஐந்து பரிமாணங்களையும், அவற்றில் வளர்ந்த கொள்கைகள் பற்றியும், அதன் பின்னணிகள் பற்றியும் குறித்து இருந்தேன். இன்றைய கொள்கையை அனுமானிக்க அதனைச் சுருக்கமாகப் பார்த்தால் -

தொடர்ச்சி▼



*2004 அக்டோபரில் ஜனாதிபதி சந்திரிக்க குமாரதுங்கவின் சிறிலங்கா சுதந்திர கட்சி ஜே.வி.பியுடன் சேர்ந்து அமைத்த அரசில் விவசாய, காணிகள், நீர்ப்பாசன அமைச்சராக அநுரகுமார திஸநாயக்க பதவி ஏற்ற போது....*

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

1971இல் ஜே.வி.பி. உருவான காலத்தில் விஜயவீர தங்களது நாட்டில் இலங்கையர் என்ற ஒரு குழுமமே இருக்கின்றது, அவர்களது வளங்களை இந்திய தமிழ் மக்களும் வியாபாரிகளும்தான் வைத்திருக் கிறார்கள், ஆகவே அவர்கள் இலங்கையரின் நன்மைகளுக்காக வெளியேற்றப்பட வேண்டும் என்ற கருத்தியலை முன்வைத்து, இந்திய ஏகாதிபத் தியத்தை வளர விடக்கூடாது என்ற கொள்கையைப் பிரசாரப்படுத்தினார். வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் அவர்கள் இலங்கையர் என்ற வாதத்தை தவிர, அவர்கள் தனி இனம், பாரம்பரிய பிரதேசங்களில் வாழ்கிறார்கள் எனக் கணக்கெடுக்கவில்லை.

1976 இல் வட்டுக்கோட்டை தீர்மானத்தின் பின்னர் இளைஞர்கள் ஆயுதம் தாங்கிப் போராட முயற்சிகள் செய்து, வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் கோரிக்கைகள், பிரச்சினைகள் இலங்கை அரசியலின் நடு மேசைக்கு வர, மார்க்ஸீய - இடதுசாரித் தத்துவங்களில் விஜயவீர, லயனல் போபகே போன்றவர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் தமிழர்களது சுய நிர்ணய உரிமைகளின் அடிப்படையில் - ஆனால் அது பிரிந்து போகும் சலுகையை உள்ளடக்காது - என்று கொள்கை வகுத்தாலும், அது பின்னர் சோமவன்ஸ அமரசிங்க போன்ற கடும் போக்கு வாதிகளால் செல்லாக் காசாக்கப்பட்டது. 1977 இல் ஜே.ஆர். பதவிக்கு வந்து, மாவட்ட சபைகளின் மூலம் அபிவிருத்தித் திட்டங்களுக்கான அதிகாரங்களைப் பகிர்வதற்கான பேச்சு வார்த்தைகளை நடத்தியபோதும், இவை அதிகார பரவலுக்கான வழிமுறை, சமஷ்டி முறையைத் தாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் எனவும், ஜே.ஆரின் திறந்த முதலாளித்துவக் கொள்கையை நீக்கி, எல்லா மக்களையும் சுபீட்சமாக வாழவைக்கும் வழிகளை முன்னெடுப்போம் என்றார்கள்.

அந்தத் தொடர்ந்த போராட்டத்தில் அரசாங்கம், ஜே.வி.பி. இரு பகுதியாலுமே தமிழ் மக்கள் அவர்கள் கோரிக்கைகளை அடக்குவதற்காக பலிக் கடாக்களாகி, 1983 இல் கலவரங்களின் பின் சிங்கள - பௌத்த மக்களை ஜே.வி.பியினர் உசுப்பியது தாங்கள் எதுவித அதிகாரப் பரவலுக்கும் இடமளிக்கப் போவதில்லை என்பதிலேயே.


1987 இல் இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது அதனை எதிர்த்து நடத்திய வன்முறைகள் 1991 வரை நடந்தன. 1977 இல் இருந்து 1991 வரையான இந்தக் காலப்பகுதியில் அவர்கள் தமிழ் மக்களின் அபிலாசைகள் எவையென்றோ, அவை ஏன் எழுந்தவை என்றோ மார்க்ஸீய - இடதுசாரிகளாக எதுவித சுய விமர்சனமும் செய்யவில்லை. தமிழ் மக்களை அவர்கள் ‘ஈழக் கோரிக்கையாளர்களாக’, ‘பிரிவினைவாதிகளாகவே’ பார்த்தார்கள். பிரசாரப்படுத்தினார்கள். சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தை பாதுகாப்பது, பிரிவினைவாதிகளிடமிருந்து விடுவிப்பதுதான் தங்கள் கடமை, அதற்கானது தங்கள் போராட்டம் என்று கூறப்பட்டது.

இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டதுதான் அரசமைப்பின் 13 ஆவது திருத்தம்.

1991 தங்களை அரசியல் ரீதியாக நிலை நிறுத்திக் கொள்ள சந்திரிகா பண்டாரநாயக்காவின் தயவில் காலூன்றியவர்கள், அவர் தனது 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களுக்கு எவ்வளவு பிரச்சினைகள் உண்டு என்றும், நாடு பிரிக்கப்படாத விதத்தில் அவர்களது அபிலாசைகளை உள்ளடக்க பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவேன் என்றும், பிரசாரப் படுத்தி, அதன் மூலம் வெற்றி பெற்று, விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தையை நடத்தினார். சந்திரிகா முன்னெடுத்த பேச்சு வார்த்தைகள், பரந்த பரப்பில் ஜே.வி.பியினரின் 1977-இல் பொதுக்குழு தீர்மானத்தை ஒட்டியதாகவே இருந்தது.

அவரது அரசில் அங்கம் வகித்தே, அவற்றைக்

தொடர்ச்சி▼


பொன்னம்பலம் இராமநாதன்


பொன்னம்பலம் அருணாசலம்


ஆறுமுகநாவலர்

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

குழப்பி, பின்னர் நோர்வேயின் மூலமான பேச்சு வார்த்தைகளில் ஏற்பட்ட எல்லா அங்கங்களையும் எதிர்த்து, பின் மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கி, விடுதலைப் புலிகளை அழித்து, ஈழக் கோரிக்கைக் காரர்களை அப்புறப்படுத்த வேண்டும் என்ற கொள்கையில் ஆதரவு தந்தார்கள்.

பின் மஹிந்த குடும்பம் பதவியிழந்து, கோட்டாபய வும் ஜனாதிபதி பதவியைரத் துறந்து வெளியேறிய போது, ஜே.வி.பியால் உருவாக்கப்பட்ட அறகலய அமைப்பு எந்தக் கொள்கை அடிப்படையும் இல்லாமல் நல்லெண்ணம், சமஉரிமை, சமதர்மம் என்றும், தாங்கள் இனப் பிரச்சினைக்கு இனிமேல் இடமளியோம் என்றும் பிரச்சாரங்களை முன்னெடுத்தனர்.

இந்த வரலாறுகளில் இருந்து இனப்பிரச்சினை சார்ந்து அவர்கள் கொள்கை என்று எதனைக் கணிப்பது?

1971இல் ஜே.வி.பி. முன்வைத்தது 'ஒரு நாடு, அந்த நாட்டின் எல்லைக்குள் வரும், அதாவது சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்டு, ஐக்கிய நாடுகள் சபையினால் இலங்கையின் நிலப்பரப்பு என ஏற்றுக்கொள்ளப்பட்ட முழு நிலப்பரப்பும் முற்றும் இலங்கை என்ற நாட்டின் அரசின் அதிகாரத்தின் கீழ் இருக்க வேண்டும்.' என்பதுதான்.

அதன் புரிந்துணர்வு, நாட்டின் நிலப்பரப்பு முழுவதும் நாட்டின் ஓர் அரச அதிகாரத்தில் இருக்க வேண்டும், எந்த ஒரு பகுதிக்கும் நிலப்பரப்பில் முன்னுரிமை இருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதும் அந்த நிலப்பரப்பு ஓர் அதிகாரத்தின் கீழ் அமையும் என்பதும்தான்.

இந்தக் கொள்கையின் பிரதிபலிப்புதான், உள் ளூராட்சித் தேர்தல்களின் முடிவுக்கு பின்னர், தாங்கள் பெரும்பான்மை பெறாத சபைகளிலும், தாங்கள் சபை அதிகாரத்தை பெற வழிவகை செய்ய வேண்டும் என்ற ஜனாதிபதியின் அறிவிப்பும், தேவையானால் தனது நிறைவேற்ற அதிகாரத்தையும் நாடாமன்றத் தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பாவித்து அதற்குத் தேவையான சட்டங்களை உருவாக்குவோம் என்ற தொனிகள்.

2014 இல் அநுரா ஜே.வி.பி. கட்சியின் தலைமைப் பதவியை ஏற்று, தாங்கள் மக்கள் மேல் கட்டவிழ்த்து விட்ட வன்முறைகளுக்கு மன்னிப்புக் கோரினாலும், 1983 ஆம் ஆண்டு உணர்ச்சி கொந்தளிப்பால் ஏற்பட்ட இனக் கலவரம் போன்று, அறகலயவின் முடிவில் அரசாங்கத்தின் ஆதரவாளர்களுக்கு எதிராக வன் முறை வெடிக்கத்தான் செய்தது.

தேர்தல் பரப்புரைகளில் தேசிய மக்கள் சக்தி தாங்கள் பதவிக்கு வந்தால், நாட்டில் சட்டம் - ஒழுங்கு, நீதிச் சுதந்திரம், சம உரிமை, சமதர்மம் நிலைநாட்டப்படும் என்றார்கள். தற்போது உள்ளூராட்சி சபைகளின் பின்னடைவுகளில், சட்டங்களையே தங்கள் சார்பாக புதிதாக மாற்றி, நாட்டின் அதிகாரம் முழுவதையும் தங்கள் கைகளில் வைக்க வேண்டும் எனப் பேசப் படுகிறது.

இதில் அவர்கள் தமிழ் மக்களுக்கு தெரிவிக்கும், 'எங்களை நம்புங்கள், நாங்கள் உங்களின் அபிலா சைகளை நிறைவேற்றுவோம்!' என்பதை அவர்களது 1971 இல் இருந்து பின்பற்றும் கொள்கைகளின் மாற் றாக, தமிழ் மக்களின் அபிலாசைகளை எந்த விதத் தில், எந்த வடிவத்தில் தருவார்கள் - தமிழ் மக்களின் நல்லெண்ணத்தில் முன்னேற? அந்த அபிலாசை வட்டுக்கோட்டை தீர்மானம்தான் என்று பிடிவாதமாக இருக்க வேண்டியது இல்லை.

இப்பொழுதும் தமிழ் மக்களின் கோரிக்கைகளோ, அபிலாசைகளோ இனவாதமாக பார்க்கப்பட்டு, தங்களது நிலைப்பாடு அப்படியானது அல்ல, சகல இலங்கை மக்களுக்குமானது என்ற கொள்கைப்பாடு ஜே.வி.பியினால் மட்டுமல்ல, எல்லால் பெரும்பான்மை கட்சிகளாலும் முன் வைக்கப்படுகின்றது.

இனவாதமும், அதற்கான அரசியலும் எங்கே தோற்றின? இவை பழைய வரலாறுகள்தான். ஆகவே இந்தக் கட்டுரைக்கு விளக்கமான பதிவுகள் தேவை யில்லை. ஆனாலும் நல்லெண்ணம், நம்பிக்கை என்ற உளச்சக்தியற்ற வார்த்தை பிரயோகங்களுக்காக சிலவற்றைக் குறிக்கிறேன்.

இன்று பேசப்படும் 'ஒரு நாடு, எல்லோரும் ஒரு மக்கள், எல்லோரும் இலங்கையர், அதன் வளங்களில் யாவரும் பயன் பெற வேண்டும்' என்ற நல்லெண் ணத்திலும் நம்பிக்கையிலும்தான் சுதந்திர காலத் தமிழ் மக்களின் தலைவர்களான பொன்னம்பலம் இராமநாதன், அருணாசலம், ஆறுமுகநாவலர் போன்றோர் சுபிட்சமான இலங்கையை கட்டி எழுப்பஓ புறப்பட்டார்கள். ஆனால் நடந்தது என்ன?

இப்பொழுது தேசிய மக்கள் சக்தியிடம் இருந்து, தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகளை ஒட்டி நல்லெண்ணமும் நம்பிக்கையும் கொண்ட சமிக்ஞை கள் வெளி வருகின்றனவா?

(வளரும்)

# புளொட்டிலிருந்து லிங்கநாதன் விலகினார் தலைமையைக் காட்டமாக விமர்சிக்கின்றார்!

(ந.லோகதயாளன்)

தற்போது இருக்கும் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் (புளொட் அமைப்பின்) தலைமை தானாக ஒதுங்கிக் கொள்ள வேண்டும் என்று கோரியுள்ள அதன் முக்கிய உறுப்பினரும், வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினருமான ஜி.ரி.லிங்கநாதன், தற்போதைய புளொட் தலைமையைத் தாம் நிராகரித்து, அந்த அமைப்பில் இருந்து தாம் விலகுகின்றார் எனவும் நேற்று அதிரடியாக அறிவித்துள்ளார்.

தமிழீழ மக்கள் விடுதலை கழகம், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஆகிய அமைப்பின் செயலாளர்களுக்கு புளொட் அமைப்பின் அனைத்து அரசியல் செயல்பாடுகளிலிருந்தும் தாம் விலகிக் கொள்கின்றார் எனத் தெரிவித்து அவர் கடிதம் எழுதியுள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் சொந்த அரசியல் போக்குகளில் இயங்கிக் கொண்டிருந்த முன்னணித் தோழர்கள் வாக்கு அரசியலில் ஈடுபாடு காட்டத் தொடங்கியதன் பின்னர் அது வரை கொண்டிருந்த தார்மீகங்களையும், தத்துவங்களையும் கைவிட்டு, ஈழப்பிரச்சினையைத் தங்கள் சுயநலன்களுக்காகப் பாவிக்க ஆரம்பித்தனர்.

அதன் தொடர்ச்சியாக தமிழீழ மக்கள் விடுதலை கழகம் சார்ந்த எமது தோழர்கள் கடந்த காலங்களில் படுகொலை செய்யப்பட்டிருந்த நிலையில், அவர்களுடைய கொலைகள் தொடர்பாக கழகமானது ஒரு விசாரணைக்குழுவை நியமித்திருந்த போதும், அவ்விசாரணைக் குழுவானது பின்னர் கலைக்கப்பட்டதாக அறிந்துகொண்டேன். எமது தோழர்கள் ஏன் கொல்லப்பட்டார்கள் என்ற உண்மையை அறிந்துகொள்ள முடியாமல் போனதுடன் கழகத்தின் தலைமைக்குழு உறுப்பினர்களிடமிருந்து எனது கேள்விகளுக்கான பதில்கள் கிடைக்காத காரணத்தினால் நான் மிகவும் கவலையடைந்துள்ளேன்.

கழகத்தின் தலைவர்கள் பேசிய



ஜனநாயகம், இடது அரசியல், நுண்ணரசியல் போன்ற அறிவுச் செயற்பாடுகள் எல்லாம் காணாமல் போய், அவர்கள் வெறும் உணர்வுகளால் இயக்கப்பட்டார்கள். இதன் காரணமாக கழகத்தில் கேள்வி கேட்ட என்னைப் போன்ற தோழர்கள் ஒதுக்கப்பட்டார்கள்.

அத்துடன் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் சொத்துக்கள் கடந்த 26 ஆண்டுகளாக கழகத்தின் முன்னணி உறுப்பினர்களால் முறையற்ற விதத்தில் தனிப்பட்ட ரீதியில் கையகப்படுத்தி விற்பனை செய்யப்பட்டுள்ளன. மக்களின் பணத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பான கணக்கறிக்கைகளோ ஆவணங்களோ அமைப்பில் இல்லை. சொத்துக்களும் இல்லை. இதற்கான பதிலும் கழகத்தின் முன்னணி தோழர்களால் வழங்கப்படாத காரணத்தினால் தொடர்ந்தும் கழகத்தில் பயணிப்பதற்கு எனது சுயகௌரவம் இடங்கொடுக்கவில்லை.

கடந்த காலத்தில் தமிழீழ மக்கள் விடுதலை கழகமானது ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொண்டதன் பின்னர் நங்கூரம் சின்னத்தில் போட்டியிட்டு 1994 ஆம் ஆண்டு மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றிருந்தது. அத்துடன் வவுனியா நகரசபை, சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேசசபை, பருத்தித்துறை நகரசபை ஆகியவற்றை தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் நங்கூரம் சின்னத்தில் கைப்பற்றியிருந்தது. யாழ்ப்பாணம் மாநகரசபையில் அதே ஆண்டு எதிர்க்கட்சியாக மாணிக்கதாசன் தலைமையில் கழகம் தனது பங்களிப்பை வழங்கியிருந்தது.

அதனைத் தொடர்ந்து வவுனியா நகரசபை தலைவராக தெரிவு செய்யப்பட்டு எனது தலைமையில் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தது.

இருந்தபோதும் கழகத்தின் முன்னணி தலைவர்கள் தங்கள் அரசியல் சுயலாபத்திற்காக மக்களைப் பற்றிய சிந்தனையற்றவர்களா. - வாக்குகளை மாத்திரம் குறிக்கோளாக கொண்டு - வீட்டு சின்னம், குத்து விளக்குச் சின்னம் மற்றும் சங்கு சின்னம் என காலத்திற்கு ஏற்றவகையில் மாறிக்கொண்டு, தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தினையும் அதன் அரசியல் சித்தாந்தத்தினையும் நீர்த்துபோகச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

மிதவாதத் தமிழ்த் தேசிய அரசியல் வாதிகளின் வெற்று உணர்ச்சி அரசியலானது ஈழத்தமிழருக்கான எதையும் அரசியல்களத்தில் சாதிக்க வல்லமையற்றது எனத் தெரிந்து குறுந்தேசிய அரசியலிலிருந்து விலக ஆரம்பித்துள்ளேன்.

எதிர்காலத்தில் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் ஸ்தாபகரும், செயலதிபருமான க.உமாமகேஸ்வரன் மற்றும் புதியபாதை சுந்தரம் ஆகியோரின் பொது உடைமைவாத சிந்தனைக்கு அமைவாக கழகம் இயங்கினால் நான் தொடர்ந்து பயணிப்பேன். ஆனால் தற்சமயம் இருக்கும் தலைமையானது தானாக ஒதுங்கிக் கொள்ள வேண்டும் என்பதுடன் தற்போது இருக்கும் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் தலைமையை நான் நிராகரிக்கிறேன்.

எனது இந்த நிலைப்பாடானது, சில தோழர்களுக்கு கசப்பானதாக இருக்கலாம். என் மீது அவதூறுகள் அள்ளி வீசப்படலாம். நான் ஒரு போராளியாக எனது வாழ்க்கையை மக்களுக்காக அர்ப்பணித்தேன் என்பதே உண்மை. அதனால் ஒரு போதும் நான் கலங்கி நிற்கப்போவதுமில்லை, என் தேசத்தை விட்டு ஓடப்போவதுமில்லை. என்னை நம்பியுள்ள தோழர்களுக்கும், பொதுமக்களுக்கும் உண்மையாக பொதுவுடைமை அரசியல் சித்தாந்தத்தில் பயணிப்பேன் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன். - என்றுள்ளது.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிறப்புரையாற்றும் சீனப் பேராசிரியர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல் துறையின் ஏற்பாட்டில் நடைபெறும் கருத்தரங்கில் சீன நாட்டுப் பேராசிரியர் ஹீ யான் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 23 ஆம் திகதி காலை 10 மணி முதல் 12 மணி வரை இரு மணிநேரம் நிகழ்வு நடைபெறவுள்ளது.

“சீனாவின் விரைவான பொருளாதார வளர்ச்சி மற்றும் முழுமையான வறுமை ஒழிப்பு: இலங்கைக்கான பாடங்கள்” எனும் தலைப்பில் இந்த உரை நிகழ்த்தப்படவுள்ளது.

சீனாவின் வளர்ச்சி அனுபவத்திலிருந்தும் இலங்கையின் பொருளாதார எதிர்காலத்திற்கான அவற்றின் பொருத்தத்திலிருந்தும் முக்கியமான நுண்ணறிவுகளை ஆராயும் சிந்தனையைத் தூண்டும் அமர்வில் அனைவரையும் பங்கேற்குமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல் துறை அழைப்பு விடுத்துள்ளது.

சீனாவின் தலைநகரான பீஜீங்கில் உள்ள சிங்குவா பல்கலைக்கழகத்தில் சர்வதேச பகுதி ஆய்வுகள் கற்கை நிறுவனத்தின் உதவி பேராசிரியராக ஹீ யான் செயற்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



# இன்றைய ராசி பலன்கள் - 20.05.2025




இன்று இனிமையான நாளாக இருக்கும்.உங்கள் கடின முயற்சி மூலம் உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும்.

நீங்கள் புத்திசாலித்தனத்துடன் ஆற்றும் பணிக்காக உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும்.உங்கள் கீழ்பணிபுரிவோர்களிடமும் நல்லுறவை பராமரிப்பீர்கள்.

பாதுகாப்பற்ற உணர்வை தவிர்ப்பதற்கு முயற்சி செய்யுங்கள். உங்கள் குழந்தையின் வளர்ச்சி பற்றிய கவலை உங்களிடம் காணப்படும்.

இன்று உங்களால் பணம் சேமிக்க இயலும். எதிர்பாராத வகையில் இன்று பணவரவு காணப்படும்.

தேக ஆரோக்கியம் சிறந்த நிலையில் காணப்படும்.




பல தடைகளுக்குப் பின் உங்களுக்கு திருப்தி கிடைக்கும். உங்கள் மனதை ஓய்வாக வைத்துக் கொள்ள வேண்டும்.

பணிச்சுமை அதிகரித்துக்கொண்டே போவதைக் காண்பீர்கள். பணியில் தவறுகள் நேரலாம்.

உங்கள் வார்த்தைகள் உங்கள் துணையின் மனதை காயப்படுத்தும். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த இதனைத் தவிர்க்க வேண்டும்.

இன்று பணத்தட்டுப்பாடு காணப்படும். அதிகரிக்கும் செலவினங்கள் காரணமாக நீங்கள் கவலைக் குள்ளாவீர்கள்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு ஆளாவீர்கள்.




பொழுது போக்கு நிகழ்ச்சிகள் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். பாடல்கள் கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணிச்சூழல் கடினமாக இருப்பதாக உணர்வீர்கள். கடினமான வேலை செய்ய வேண்டியிருப்பதன் காரணமாக மகிழ்ச்சியின்றி காணப்படுவீர்கள்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.உங்கள் மனதில் உள்ள குழப்பம் உங்கள் மகிழ்ச்சியை தடுக்கும்.

இன்று சீரற்ற பணப்புழக்கம் காணப்படும்.உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நிலைமை காணப்படாது.

நீங்கள் தியானம் மேற்கொள்வதன் மூலம் மனதை அமைதியாகவும் ஓய்வாகவும் வைத்துக் கொள்ள முடியும்




இன்று நீங்கள்அனுசரித்துச் செல்ல வேண்டும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

உங்கள் துணையிடம் நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

உங்கள் நிதிநிலைமையை சமாளிப்பதை நீங்கள் கடினமாக உணர்வீர்கள். உங்கள் தகுதிக்கு மீறி செலவு செய்வீர்கள்.

உங்கள் தாயின் உடல் நலத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று இலாபகரமான நாளாக இருக்கும். அக்கம் பக்கத்தினரின் ஆதரவு உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். இன்று நல்ல விஷயங்களை செய்வீர்கள்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். அவர்கள் உங்கள் பணிகளைப் பாராட்டுவார்கள். உங்கள் திறமைகள் மதிக்கப்படும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

உங்களுக்கு தொலைதூரத்திலிருந்து பணம் வருவதற்கான வாய்ப்பு உள்ளது. இந்தப் பணம் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

உங்கள் தேக ஆரோக்கியம் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. சிறப்பாக இருக்கும்.




சாதகமான வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்வதன் மூலம் முன்னேறலாம். ஆன்மீக நோக்கத்துக்கான பயணங்கள் சாதகமான பலன்களைத் தரும்.

உங்கள் சிறந்த பணியாற்றும் முறை காரணமாக நீங்கள் நற்பலன்களைப் பெறுவீர்கள். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு அமையும்.

இன்று பணவரவு அதிகமாகக் காணப்படும். உங்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்கும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் உங்கள் உடலை சீராக வைத்திருப்பீர்கள்.




உங்களுக்கான சரியான வழியை தேர்ந்தெடுக்க நீங்கள் கற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் திறமையாக திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

மேலதிகாரிகளுடன் சச்சரவு ஏற்பட வாய்ப்புள்ளது. அவர்களிடம் அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் சச்சரவுகளைத் தவிர்க்கலாம்.

உங்கள் துணையிடம் வன்மையாக நடந்து கொள்வதை தவிர்க்கவும். உங்கள் துணையிடம் நல்லுறவை தக்க வைத்துக்கொள்ள முயலுங்கள்.

இன்று பணவரவுக்குச் சாதகமான சூழ்நிலை அமையாது. நீங்கள் பணத்தைச் சேமிக்க வேண்டும். பணத்தை பத்திரமாக பாதுகாப்பாக கையாண்டால் பண இழப்பை தவிர்க்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. வேலைகள்அதிகமாக இருப்பதன் காரணமாக பதற்றங்கள் காணப்படும்.




இன்று மகிழ்ச்சிகரமான நாளாக இருக்காது. இன்று குழப்பமான நிலையில் இருப்பீர்கள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் தவறாக இருக்கும்.

வளர்ச்சி குறைந்து காணப்படுகின்றது. பணிச்சுமை அதிகரித்து காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்துக்குள் முடிக்க நீங்கள் திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடனான தொடர்பு கொள்ளலில் பிரச்சினைகள் காணப்படும். இன்றைய நாளின் வனப்பு அதனால் கெடும்.

நிதிநிலைமையைப் பொறுத்த வரை இன்று அவ்வளவு சிறப்பாக இருக்காது. நீங்கள் சேமிக்க வேண்டியது அவசியம்.

தோல் சம்பந்தமான பிரச்சினைகளைச் சந்திப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 20.05.2025




புதிய தொடர்புகள் இன்று உங்களுக்கு உதவிகரமாக இருக்கும். இன்று பயணங்கள் காணப்படும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். உங்கள் உழைப்புக்குப் பலன் கிடைக்கும். நீங்கள் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடனான உறவில் சமநிலையோடு இருங்கள். இன்றைய நாள் சிறப்பாக இருக்கும்.

உங்களிடம் போதிய அளவு பணம் காணப்படும். உங்கள் குடும்பத்துக்காகப் பணம் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினைகள் காணப்படாது. நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




முறையான திட்டமிடல் மூலம் கடினமான விஷயங்களையும் எளிதில் கையாளலாம்.

நீங்கள் முறையாக பணிகளை ஆற்ற இயலாது. உங்கள் பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

இன்று உங்கள் துணையுடன் மகிழ்ச்சி குறைந்து காணப்படும். இன்று உங்களால் நல்லிணக்கத்தை பராமரிக்க இயலாது.

ஆன்மிக காரியங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு ஆறதலைத் தரும். பயணங்களால் செலவுகள் ஏற்படும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தோள்களில் வலிகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.




உங்கள் பிரச்சினைகள் பற்றிக் கவலைப்படாமல் மகிழ்ச்சியுடன் இருங்கள். கோவிலுக்குச் சென்று வருவது ஆறுதலைத் தரும்.

நீங்கள் செய்த பணிக்கு பாராட்டு பெறுவீர்கள். பணிகள் ஆற்றுவதில் சில தாமதங்கள் காணப்படும்

நீங்கள்இன்று உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பேசுவீர்கள். அதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்களிடம் இருக்கும் பணம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும்.

கண்களில் தொற்று போன்ற சிறிய உபாதைகள் காணப்படும். தகுந்த மருத்துவ சிகிச்சை உங்கள் நலனைப் பாதுகாக்கும்.




சில தடங்கல்களுக்குப் பின் உங்களுக்குத் திருப்தி கிடைக்கும். உங்கள் கவலைகளை மறக்க மனதை அமைதியாக வைத்திருங்கள்.

உங்கள் பணியில் சில அசௌகரியங்களை எதிர்கொள்வீர்கள். பணிச்சுமை அதிகரித்துக் கொண்டேயிருக்கும்.நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுவீர்கள்.

இன்று உங்கள் பேச்சில் கடுமை காணப்படும். இது உங்கள் நாளின் இனிமையைக் கெடுக்கும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்காது. இன்று அதிகரிக்கும் செலவினங்கள் காணப்படும்.

உங்கள் கால்களில் வலிகள் ஏற்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.




# ஓட்டமாவடி நாவலடியில் விபத்தில் ஒருவர் பலி

( வி.ரி.சகாதேவராஜா)

ஓட்டமாவடி நாவலடி பிரதேசத்தை அண்மித்த கொழும்பு பிரதான வீதியில் டிப்பர் ஒன்றும், டிராக்டர் ஒன்றும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் இடம் பெற்றது.

குறித்த சம்பவத்தில் டிராக்டரைச் செலுத்தி வந்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துவிட்டார் எனத் தெரிய வருகிறது.